நீங்கள் ஐரோப்பிய ஒன்றிய (EU), ஐரோப்பிய பொருளாதார வலய (EEA) அல்லது சுவிஸ் நாட்டு குடிமகனா அல்லது அத்தகையவரின் குடும்ப அங்கத்தவரா?

ஆம்

அவ்வாறாயின், தற்போது எந்த அந்தஸ்தினைக் கொண்டிருந்தாலும், ஐரோப்பிய ஒன்றியக் குடியேற்றத் திட்டத்தின் கீழ் நீங்கள் விண்ணப்பம் மேற்கொள்ளவேண்டும்.

GOLDSMITH CHAMBERS
www.goldsmithchambers.com
immpublic@goldsmithchambers.com
Tel: 020 7353 6802
@GoldsmithImm_PL

# யார் என்ன செய்யவேண்டும் (மற்றும் எப்போது?)

2020 ஜனவரி 31 அன்று ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து ஐக்கிய இராட்சியம் வெளியேறியுள்ளது.

ஐக்கிய இராட்சியத்தில் தொடர்ந்தும் வசித்து வேலைசெய்யும் ஐரோப்பிய ஒன்றிய குடிமக்கள் (மற்றும் அவர்களது குடும்ப அங்கத்தவர்கள்) பலர் உள்ளனர்.

இந்த ஐரோப்பிய ஒன்றிய குடிமக்களும் மற்றும் அவர்களுடைய குடும்ப அங்கத்தவர்களும் ஐக்கிய இராட்சியத்தில் தொடர்ந்தும் வசிக்க விரும்பினால் அவர்கள் தமது புதிய அந்தஸ்திற்கு விண்ணப்பம் மேற்கொள்ளவேண்டும்.

இந்த விண்ணப்பங்கள் பின்னிணைப்பு ஐரோப்பிய ஒன்றியம் (Appendix EU) இன் கீழ் மேற்கொள்ளப்படவேண்டும். இது ஐரோப்பிய ஒன்றிய குடியேற்றத் திட்டம் எனவும் அறியப்படுகின்றது. ஐரோப்பிய ஒன்றிய குடிமக்களும் அவர்களது குடும்ப அங்கத்தவர்களும் மற்றும் பிரித்தானியக் குடிமகனாகத் தகுதிபெறுபவரின் குடும்ப அங்கத்தவர்களும் (சில சூழ்நிலைகளில்) எந்த அடிப்படையில் விண்ணப்பித்தால் குடியேற்ற அந்தஸ்து (settled status) அல்லது முன் குடியேறிய அந்தஸ்து (pre-settled status) வழங்கப்படும் என்பதை வரையறை செய்வதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.

இந்த ஐரோப்பிய ஒன்றியக் குடியேற்றத் திட்டம் சில காலமாக நடைமுறையில் உள்ளது.

இந்தத் திட்டம் 2021 யூன் 30 வரை நடைமுறையில் இருக்கும். ஐரோப்பிய ஒன்றிய குடிமக்கள் உள்நாட்டில் விண்ணப்பிக்கவேண்டுமாயின் 2020 டிசம்பர் 31 இல் ஐக்கிய இராட்சியத்தில் இருந்திருக்கவேண்டும்.

2020 டிசம்பர் 31 இல் ஐக்கிய இராட்சியத்தில் இல்லாத ஐரோப்பிய ஒன்றிய குடிமகனின் குடும்ப உறுப்பினர்கள் சிலரும் இதில் விண்ணப்பிக்கக்கூடியதாக இருக்கும். உதாரணமாக, அந்தத் திகதியில் அல்லது அதற்கு முன்பிருந்தே குடும்பரீதியான உறவு நீடித்திருந்தால் அவர்களும் விண்ணப்பிக்கமுடியும்.

நிரந்தர வதிவிட அட்டை (Permanent Residence Card) அல்லது வதிவிட அட்டை (Residence Card) அல்லது வேறு மூலத்தை அடிப்படையாகக் கொண்ட வதிவிட அட்டை (Derivative Residence Card) வைத்திருக்கும் ஐரோப்பிய ஒன்றிய குடிமக்களும் கூட இந்தத் திட்டத்தின் கீழ் கண்டிப்பாக விண்ணப்பிக்கவேண்டும்.

சுருக்கமாக, ஐக்கிய இராட்சியத்தில் தொடர்ந்தும் வசித்து வேலை செய்ய/கல்வி கற்க விரும்பும் அனைத்து ஐரோப்பிய ஒன்றிய குடிமக்களுக்கும் அவர்களின் குடும்ப அங்கத்தவர்களுக்கும்/தங்கி வாழ்பவர்களுக்கும் இந்தத் திட்டம் பொருந்தும்.

GOLDSMITH CHAMBERS

# வேறு யார் விண்ணப்பிக்கமுடியும்?



பின்வருவோர் விண்ணப்பிக்கத் தேவையில்லை:

- ஐரோப்பிய ஒன்றிய பொருளாதார வலய நாட்டவர் (EEA national) அல்லாத வெளிநாட்டவர் ஒருவர் காலவரையறையற்ற உள்நுழைவு விசா (indefinite leave to enter) அல்லது காலவரையறையற்ற தங்குமிட விசாவினை (indefinite leave to remain) வைத்திருப்பாராயின் அவர் விண்ணப்பிக்கத்தேவையில்லை
- 'இரட்டைக் குடியுரிமை' மற்றும் பிரித்தானியக் குடியுரிமை அல்லது ஐரிஷ் குடியுரிமை கொண்டவராயின் விண்ணப்பிக்கத்தேவையில்லை. (உங்களின் குடும்ப அங்கத்தவர்கள் ஐரோப்பிய பொருளாராத வலய நாட்டைச் சாராதவர்கள் ஆயின் விண்ணப்பம்

இந்தத் திட்டத்தின் கீழ் வேறு யார் விண்ணப்பிக்கமுடியும்? சில உதாரணங்கள்:

- ஐரோப்பிய ஒன்றிய குடிமகனின் குடும்ப உறுப்பினர்.˙.கணவன் மனைவி
- -ஐரோப்பிய ஒன்றிய குடிமகனின் பிரதான பாதுகாவலர்
- -ஐரோப்பிய ஒன்றிய குடிமகனின் நீண்டகால பங்குதாரர் (partner) (ஐரோப்பிய ஒன்றிய குடிமகனின் ஓர் நீண்டகால பங்குதாரராக முதன்முறையாக விண்ணப்பிப்பதாயின் நீங்கள் பழைய விதிமுறைகளின் கீழ் முதலாவது விண்ணப்பத்தினை மேற்கொள்ளவேண்டும்).
- -ஐரோப்பிய ஒன்றிய குடிமகனில் தங்கி வாழும் உறவினர்.
- -வட அயர்லாந்தினைச் சேர்ந்த சில நபர்களும் மற்றும் அவர்களின் ஐரோப்பிய பொருளாதார வலயத்தினைச் சாராத குடும்ப உறுப்பினர்களும் (2020 ஆவணி 24 இலிருந்து)



நற்செய்தி : ஐரோப்பிய ஒன்றிய குடியேற்றத் திட்ட (EUSS) விண்ணப்பம் இலவசமானது.

GOLDSMITH CHAMBERS

# நான் எவ்வாறு விண்ணப்பிப்பது?

எவ்வாறு நீங்கள் விண்ணப்பத்தினை மேற்கொள்வீர்கள்?

ஐரோப்பிய ஒன்றியக் குடிமகனுடனான உங்களுடைய உறவுமுறை மற்றும் நீங்கள் மேற்கொள்ளவேண்டிய விண்ணப்பத்தின் வகையினைப் பொறுத்து 'EU Exit: ID Document Check' என்னும் app இனைப் பயன்படுத்தி அல்லது தபால் மூல விண்ணப்பத்தினைப் பயன்படுத்தி விண்ணப்பிக்கமுடியும்.

# எந்த விதமான வதிவுரிமை வழங்கப்படுகின்றது?

ஏதேனும் ஒன்று:

**Pre-Settled status**: ஐந்து வருட காலத்திற்கு வழங்கப்படுகின்றது. அதன் பின்னர் நீங்கள் நிரந்தர வதிவுரிமைக்கு விண்ணப்பிக்கலாம், அல்லது

**Settled status**: நிரந்தர வதிவுரிமையைப் போன்றது. ஒரு வருடத்தின் பின்னர் பிரித்தானியக் குடியுரிமைக்கு நீங்கள் விண்ணப்பிக்கலாம்.

# இந்த இரண்டு வகையான அந்தஸ்தினையும் பெற்றுக்கொள்வோர் எவற்றை செய்யமுடியும்?

Settled மற்றும் Pre-Settled ஆகிய இரண்டு அந்தஸ்துக்களுடனும் நீங்கள்:

- ஐக்கிய இராட்சியத்தில் வேலை செய்யலாம்
- தற்போது நீங்கள் பயன்படுத்துவதைப்போல NHS இனை இலவசமாகப் பயன்படுத்தலாம்
- கல்விச் செயற்பாட்டில் இணைந்துகொள்ளலாம் அல்லது தொடர்ந்து கல்வி கற்கலாம்
- தகுதியுடையோர் நிதிசார் உதவிகள் மற்றும் ஓய்வூதியம் போன்ற அரசாங்க நிதி உதவிகளைப் பெற்றுக்கொள்ளலாம்
- ஐக்கிய இராட்சியத்திற்குள் உள்ளேயும் வெளியேயும் பயணிக்கமுடியும்.

GOLDSMITH CHAMBERS



## ஐரோப்பிய ஒன்றிய குடியேற்றத் திட்டத்தினை சரியான முறையில் அடைவது சிக்கலானது......

உரிய பயிற்சிபெற்றவர்களால் தனிநபர்களுக்கும் அமைப்புக்களுக்கும் ஏற்ற வகையில் வழிகாட்டவும் சட்ட ஆலோசனை வழங்கவும் கோல்ட்ஸ்மித் குடிவரவு அணியினரால் (Goldsmith Immigration team) முடியும்.

இத் துண்டுப்பிரசுரம் கோல்ட்ஸ்மித் சபையின் குடிவரவுக் குழு உறுப்பினர்களான: **Sanaz Saifolahi, Samina Iqbal, Sarah Pinder and David Barr** ஆகியோரால் வரையப்பட்டு தயாரிக்கப்பட்டுள்ளது.

GOLDSMITH CHAMBERS

**www.goldsmithchambers.com**

**immpublic@goldsmithchambers.com**

**Tel: 020 7353 6802**

**@GoldsmithImm_PL**

மொழியாக்கம் / Translation: **Kulasegaram Geetharthanan, Jein Solicitors**